# <u>செங்கோட்டை நகர்மன்றம்</u>

## <u>செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் 20–06–2022</u>

## <u>அன்று காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்</u>

தலைமை : திருமதி.ஆர்.ராமலட்சுமி நகர்மன்றத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.சு.நவநீதிக் கிருஷ்ணன் நகர்மன்றத் துணைத் தலைவர் அவர்கள்

முன்னிலை : செல்வி.செ.பார்கவி பி.இ., ஆணையாளர் அவர்கள்

**<u>மன்றப் பொருள் 01 :</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 24, காந்தி ரோடு, கதவு எண் 19/2, சொத்து வரி விதிப்பு எண் 144/14809 கொண்ட கட்டிடத்தின் பெயர் சொத்துவரி அலுவலக கேட்பு பதிவேட்டில் திரு.மீராப்பிள்ளை ராவுத்தர் என்பவருடைய பெயரில் பதிவாகியுள்ளது. மேற்காணும் கட்டிடத்திற்கு இந்நகராட்சி வைப்புத் தொகை கணக்குத் தலைப்பு எண் 3408001 2016–2017ம் ஆண்டில் வரிசை எண் 7, 8 களில் உள்ள மொத்தம் தொகையான ரூ.47,292 தொகையினை இந்நகராட்சி காலம் கடந்த வைப்புத் தொகை கணக்கில் இருந்து சொத்து வரிக் கணக்கில் மேற்காணும் வரிவிதிப்பு எண்ணில் ஈடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 3090 /2015/ அ2)
அலுவலகக் குறிப்பு :
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

ஆணையாளரின் அலுவலக குறிப்பை ஏற்று தணிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 02 :</u>**

**செங்கோட்டை நகராட்சி நகர்மன்றத் தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஸ்கார்ப்பியோ ஈப்பு வாகனம் ரூ.1682000/– மதிப்பீட்டிலும், நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு Bolero ஈப்பு வாகனம் ரூ.827742/– மதிப்பீட்டிலும் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.கஎண்.10327/2022/எம்3 நாள்.17.05.2022ன்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது மேற்படி ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கான முழு செலவினத்தையும் குடிநீர் நிதியில் செலவிடவும் நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு,**

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம்** :

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று செங்கோட்டை நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையரின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக வாகனங்கள் வாங்குவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதியின் முழு செலவினத்தையும் குடிநீர் நிதியிலிருந்து செலவிட நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகாரட்சிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு குடிநீர் பிரச்சனைகள் இருந்து வருவதால் பொது மக்களின் நலன் கருதி மேற்படி குடிநீர் நிதியினை குடிநீர் பராமரிப்பு பணிக்கும், மற்றும் பொது மக்களின் அவசர அடிப்படை தேவைகளை போர்க்கால அடிப்படையில் தீர்த்து வைக்கவும் பயன்படுத்த வேண்டியுள்ளதால் குடிநீர் நிதியிலிருந்து மேற்படி வாகனங்கள் வாங்க அனுமதி மறுக்கப்படுகிறது. மேற்படி வாகனங்களை வாங்குவதற்கான செலவினங்களை அரசிடமிருந்து முழு மான்யமாக பெற்று வாகனங்களை வாங்கி கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 03 :</u>**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022ன் கீழ் செங்கோட்டை நகராட்சி முத்துசாமி பூங்காவினை மேம்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 73 நாள் 13.05.2022. ன்படி ரூ.159.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று இந்த பணியினை முறையாக தொழில்நுட்ப அனுமதி பெற்று பின்பு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னர் முறையாக ஒப்பந்தப் புள்ளி கோர அனுமதிக்கப்படுகிறது என்ற நிலையில் ஆணையாளர் அவர்களின் விளக்கத்தினை மன்றத்தில் ஏற்று அரசாணையினை பதிவு செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2022–2023ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணிணி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய தகுதியான கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | கூட்டுறவு நிறுவன பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2022–2023ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணிணி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப பொருட்கள் கொள்முதல் பணி | சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சிவகாசி | ரூ.2,98,890/- |
| | | கீழ்பாக் ரிஸிஸ்டர் மேக்கிங், புக் பைண்டிங்க, ஸ்டேசனரி, எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் புராடக்ட்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சென்னை | ரூ.3,10,730/- |

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப் சொஸைட்டி லிமிடெட், சிவகாசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி விநியோக உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைகள் உள்ளூர் சந்தை விலை விகித பட்டியலை விட மிக அதிகமாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படுகிறது. மன்ற அனுமதி பெற்று மீள ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுகிறது என்ற நிலையில் ஆணையாளரின் விளக்கத்தினை ஏற்று குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

15வது நிதிக்குழு மானியம் 2020–2021–ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி ரோடு நீர்த்தேக்க நிலைய சாலை சந்திப்பு முதல் வாஞ்சிநாதன் சிலை வரை குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நடைபெறும் பகுதி நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமானதாக உள்ளதால் அப்பகுதியில் குடிநீர் குழாய் பதிக்க செப்பனீட்டு கட்டணம் ரூ.282000/– நெடுஞ்சாலைத் துறைக்கு செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி கட்டணம் ரூ.282000/– குடிநீர் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 06 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் மேம்பாட்டு பணிக்கு இடையூறாக நின்ற புளியமரங்கள்– 8 வேம்பு–1 நாவல்–1 மற்றும் தினசரி சந்தையில் புங்கை –1 அரசமரம் –1 வேம்பு –2 ஆகிய மரங்களை முறித்து எடுத்து செல்ல 20.05.2022 அன்று ஏலம் கேரப்பட்டதில் 14 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக்கேள்வி எவரும் கோரப்படவில்லை எனவே, பணியின் அவசர அவசியம் கருதி 25.05.2022 அன்று குறுகிய கால மறு ஏலம் கோரப்பட்டது மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் (ம) முகவரி | கோரப்பட்ட ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.வே.விஜயபரதன், த/பெ வேலுச்சாமி,<br>43/22 அம்பேத்கார் தெரு, | 47600/– |
| 2. | திரு.வே.சுரேஷ்குமார்,த/பெ வேலுச்சாமி,<br>43/1 அம்பேத்கார் தெரு | 50500/– |
| 3. | திரு.வி.மாரிமுத்து<br>சிவனுபாண்டி விலாஸ், செங்கோட்டை | 41000/– |
| 4. | திரு.R.கடற்கரை, சான்றோன் மடக்கு தெரு, சிந்தாமணி | 47800/– |

| | | |
|---|---|---|
| 5. | திரு.G.ஜயப்பன், த/பெ கணபதி<br>மேலூர் | 50600/- |
| 6. | திரு.ஹபிபுல்லாஇ த/பெ முகம்மது யூசுப்<br>22/63 காதர் ஒலி தரகனார் தெரு | ஏலக் கேள்வி இல்லை |
| 7. | திரு.A.கணபதி<br>24A வடக்குத்தியம்மன் கோவில் தெரு | 46100/- |
| 8. | திரு.M.ராஜ்குமார் த/பெ முருகையா<br>மேலூர், செங்கோட்டை | 47500/- |
| 9. | திரு.V.மகேஷ் த/பெ வேலு<br>மேலூர், செங்கோட்டை | ஏலம் கோரவில்லை |
| 10. | திரு.K.காவையா த/பெ கண்ணயாமுதலியார்<br>காசிமேஜர்புரம் | 23800/- |
| 11. | திரு.M.ஞானராஜ், த/பெ முத்தையா<br>7A. சுப்பையா தெரு, மேலூர், செங்கோட்டை | 23500/- |
| 12. | திரு.N.தெட்சிணா மூர்த்தி, த/பெ நீராத்திலிங்கம்<br>10, வெள்ளையப்பன் தெரு, மேலூர், செங்கோட்டை | ஏலம் கோரவில்லை |
| 13. | திரு.சூர்யா மாரிச்செல்வம், த/பெ சுப்பிரமணியன்<br>8B பட்டங்கட்டியார் தெரு, செங்கோட்டை | ஏலம் கோரவில்லை |
| 14. | திரு.M.சுப்பிரமணியன், த/பெ மாடக்கண்ணு<br>8B பட்டங்கட்டியார் தெரு, மேலூர், செங்கோட்டை | 35100/- |

அலுவலக குறிப்பு

அ) கோரப்பட்ட ஏலக்கேள்விகளில் வ.எண்.5ல் திரு.G.ஜயப்பன் என்பவரால் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை ரூ.50600/- ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) சந்தை மேம்பாட்டுப் பணியின் அவசர அவசியம் கருதி உயர்ந்த ஏலக்கேள்வி கோரி திரு.G.ஜயப்பன் என்பவருக்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று மரங்களை முறித்து எடுத்து செல்ல ஆணை வழங்கியமைக்கும மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

அனுமதிக்கப்படுகிறது.

<u>மன்றப் பொருள் 07 :</u>

செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் JJM 2021-2022 Amrut 2.0 திட்டத்தில் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு வரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதில் கீழ்கண்ட செங்கோட்டை நகராட்சி பகுதியையும் இணைக்க தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப கேட்கப்பட்டுள்ளது. JJM திட்டம் 2021-2022

Amrut 2.0 ன் கீழ் புதிதாக அனைத்து இனங்களையும் சேர்த்து (குடிநீர் ஆதாரம், குடிநீர் விநியோக உந்து குழாய் மற்றும் விநியோக குழாய் நீர் தேக்க தொட்டிகள், குடிநீர் இணைப்புகள்) நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும் விதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மூலம் திட்ட ஆய்வு செய்வதில் செங்கோட்டை நகராட்சியையும் இணைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 08 :**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020ன் கீழ் செங்கோட்டை நகராட்சி காலாங்கரை EB ஆபீஸ் அருகில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு பெற ரூ.2218/- மின் வாரியம் செங்கோட்டைக்கு செலுத்த வேண்டியுள்ளது. ரூ.2218/- வருவாய் நிதியிலிருந்து மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும்

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ரூ.2218/- ஐ மின் வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 09:**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்கின் மீது இந்நகராட்சி சார்பாக இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.I.K.சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியமைக்கும், எதிர்வாதுரை தயார் செய்தமைக்கும் கீழ்கண்டவாறு வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் மொத்தத் தொகை ரூ.15,000/- வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் மற்றும் விபரம் | தற்போதைய நிலை | வழக்கறிஞர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | Appeal No 79/2014<br>Principal Sub Court Tenkasi | தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.2500/- |
| 2 | Appeal No 73/2019<br>Principal Sub Court Tenkasi | தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.2500/- |
| 3 | Appeal No 108/2019<br>Additional Sub Court Tenkasi | இந்நகராட்சிக்கு சாதகமாக 19-01-2022ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. | ரூ.2500/- |
| 4 | Appeal No 30/2011<br>Principal Sub Court Tenkasi | தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.2500/- |
| 5 | Appeal No 104/2019<br>Additional Sub Court Tenkasi | இந்நகராட்சிக்கு சாதகமாக 05-04-2022ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. | ரூ.2500/- |
| 6 | Original Suit No 299/2019<br>Principal Sub Court Tenkasi | எதிர்வாதுரை தயார் செய்து 25-03-2022ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | ரூ.2500/- |

அலுவலகக் குறிப்பு :

1. வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்காணும் செலவுத் தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 10:**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டரானது கொள்முதல் செய்து 5 வருடங்கள் மேலாகி விட்டதாலும், அடிக்கடி பழுதாகி விடுவதால், பொது சுகாதார பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஆகிறது. எனவே புதிதாக ஸ்கேன் செய்யும் வசதியுடன் கூடிய பிரிண்டர் கொள்முதல் செய்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி தகுதியான நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஸ்கேன் செய்யும் வசதியுடன் கூடிய பிரிண்டர் கொள்முதல் செய்ய ஆகும் ரூ.25,000/- உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

விலைப்புள்ளி கோருவதற்கு அனுமதிக்கப்படுகிறது. பட்டியல் தொகையினை மன்ற அனும்மதி பெற்ற பின்னர் ஒப்பந்ததாரருக்கு வழங்க அனுமதிக்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 11:**

செங்கோட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்கா குப்பைகளை 400 வீடுகளுக்கு ஒரு (BOV) Battery Operated Vehicle வாகனம் வீதம் 13 எண்ணம் கடந்த 2018–2019ம் நிதியாண்டில் வாங்கப்பட்டு தற்பொழுது வரை 11 எண்ணம் நல்ல முறையில் பயன்பாட்டிலும் இரண்டு எண்ணம் பழுது நிலையிலும் இருந்து வருகிறது. மேற்காணும் வாகனங்களுக்கு ஒரு சார்ஜர் மட்டுமே இயங்குதல் நிலையில் இருப்பதால், BOV வாகனங்களுக்கு மின்சாரம் பேட்டரிகளில் சேமித்து குப்பை அகற்றுதல் பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால், புதிதாக 5 சார்ஜர் மட்டும் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 804/2020/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

விலைப்புள்ளி கோருவதற்கு அனுமதிக்கப்படுகிறது. பட்டியல் தொகையினை மன்ற அனுமதி பெற்ற பின்னர் ஒப்பந்ததாரருக்கு வழங்க அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 12:</u>**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கின் மீது இந்நகராட்சி சார்பாக இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியமைக்கும், எதிர்வாதுரை தயார் செய்தமைக்கும் கீழ்கண்டவாறு வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் மொத்தத் தொகை ரூ.30,000/- வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் மற்றும் விபரம் | தற்போதைய நிலை | வழக்கறிஞர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | W.P(MD) No 6040/2022<br>Trm.A.Mahabubasha | 04–04–2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.10,000/- |
| 2 | W.P(MD) No 7892/2022<br>Tr.A.Mohammed Fazludeen | 25–04–2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.10,000/- |
| 3 | W.P(MD) No 7891/2022<br>Tr.Mohammed Durai | 25–04–2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. | ரூ.10,000/- |

அலுவலகக் குறிப்பு :

1. வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்காணும் செலவுத் தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 13:</u>**

செங்கோட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும் தொழில்வரித் தொகையினை 2018–2019ம் ஆண்டில் கீழ்கண்டவாறு இரண்டு காசோலைகள் மூலமாகத் தொகைகள் பெறப்பட்டு, இந்நகராட்சி வருவாய் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கீழ்காணும் இரண்டு காசோலைகளுக்கான தொகைகளை தொழில்வரி விதிப்பு எண் 144/002/00082ல் 2011–2012ம் ஆண்டிற்கான கேட்புத் தொகை கணிணியில் வரவு வைக்கப்படவில்லை என்பதால், கணிணியில் தற்பொழுது 2011–2012ம் ஆண்டிற்கான தொழில்வரித் தொகையினை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **காசோலைப் புத்தகம் வருடம்** | **காசோலை புத்தகம் வரிசை எண்** | **காசோலை எண்** | **தொகை** |
|---|---|---|---|---|
| 1 | 2018–2019 | 152 | 975076 | 2,04,190/- |
| 2 | 2018–2019 | 189 | 978829 | 2,07,160/- |

ந.க.எண்; 2167 /2008/அ2

அலுவலகக் குறிப்பு :

1. 2011–2012ஆம் ஆண்டிற்கான கேட்புத் தொகை காசோலை வழியாக வரவு வரப்பெற்றது என்ற காரணத்தினால் TNSTC கணக்கில் 2011–2012ஆம் ஆண்டுக்கு தொழில்வரி கணிணியில் நிலுவை உள்ளதனை வஜா செய்யலாம்.
2. தொழில் வரிவிதிப்பு எண் 144/002/00082ல் 2011–2012ம் ஆண்டிற்கான கேட்புத் தொகையினை கணிணியில் ரத்து செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

ஆணையாளரின் அலுவலக குறிப்பை ஏற்று தணிக்கை விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 14:**

செங்கோட்டை நகராட்சி கணக்கர் பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கணினி செயல்படாமல் இருந்த காரணத்தினால் அதனை உடன் சரிசெய்வதற்கு உள்ளூர் கணினி நிறுவனத்தின் மூலமாக பழுது நீக்கம் செய்திட கோரப்பட்டது. மேற்படி அவசர அவசியத்தினை முன்னிட்டும் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் அழிந்துபோகாமல் இருக்கும்வகையில் பழுதினை நீக்கித்தரும்படி கோரப்பட்ட நிலையில் நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளி கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | சாதனங்கள் | நிறுவனம் / விலை விகிதம் | |
|---|---|---|---|
| 1 | | மைக்ரோ கம்யூட்டர் 26 பி அம்மன் சன்னதி தென்காசி | பிரண்ட்ஸ் கம்யூட்டர் செங்கோட்டை |
| | மதர்போர்டு | ரூ.3200 | ரூ.3400 |
| | ரேம் டி டி ஆர் 2 | ரூ.760 | ரூ.820 |
| | சர்வீஸ் சார்ஸ் | ரூ.600 | ரூ.700 |
| | ஆகமொத்தம் | ரூ.4560 | ரூ.4920 |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள மைக்ரோ கம்யூட்டர் நிறுவனத்தின் விலைவிகித அடிப்படையில் கணினி பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

எனவே இப்பணியினை அவசர அவசியமாக உடன் மேற்கொள்ளப்பட்டதற்கு ஏற்பட்ட செலவினம் ரூ.4560/- ஐ மன்றத்தின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 15:</u>**

நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 13.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றன. அதில் ஒரு நிறுவனத்தால் டெண்டர் முன் வைப்பு தொகை செலுத்தப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | ஜவஹர்லால் நேரு சாலை, பாம்பே ஸ்டோர் சமீபம், தாலுகா அலுவலகம் சமீபம், கொல்லம் ரோடு வன அலுவலக சமீபம் ஆகிய பகுதிகளில் Energy Efficient LED Mini Mast விளக்குகள் அமைத்தல் | 12.00 | 1) M/s Guhan Enterprises, Tirunelveli ஒப்பந்த மதிப்பை விட0.23% குறைவு |
| | | | 2) M/s Sri Ganga Electricals, Tirunelveli ஒப்பந்த மதிப்பை விட0.06%அதிகம் |

அலுவலக குறிப்பு

மதிப்பீட்டை விட 0.23% குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Guhan Enterprises, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் :**

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு தொகை மற்றும் பங்களிப்பத்தாரர்கள் குறித்த பெயர் விபரங்கள் எதுவும் மன்றத்திற்கு தெரிவிக்கப்படாததால் பொதுமக்களின் பங்களிப்புகள் குறித்த விபரங்கள் இம்மன்றம் அறிய இயலவில்லை. எனவே விபரங்கள் எதுவும் அறியப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படுகிறது. மேற்படி பொது மக்களின் பங்களிப்பு விபரங்கள் இம்மன்றத்திற்கு சமர்ப்பித்து மன்ற ஒப்புதல் பெற்ற பின்பு மீள ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதிக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இந்நிலையில் பங்களிப்பு விபரங்கள் ஆணையாளர் அவர்களால் கூட்டத்தில் விரிவாக விளக்கியதால் அதனை ஏற்றுக் கொண்டு குறைந்த விலை விகிதம் குகன் என்டர்பிரைசஸ் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 16:</u>**

நமக்கு நாமே திட்டம் 2021–2022ன் கீழ், கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 13.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றன. அதில் இரண்டு நிறுவனங்கள். டெண்டர் முன் வைப்பு தொகை செலுத்தப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பிரதான சாலைகளில் கண்காணிப்பு கேமரா நிறுவுதல் | 15.10 | 1) M/s ASP Infotech, Tenkasi மதிப்பீட்டு விதிதம் |
| | | | 2) M/s Infoniks, System, Kerala ஒப்பந்த மதிப்பை விட 20.68 %அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s ASP Infotech, Tenkasi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் :**

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று நமக்கு நாமே திட்டம் 2021-2022இன் கீழ் திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு தொகை மற்றும் பங்களிப்புத்தாரர்கள் குரித்த பெயர் விபரங்கள் ஏதும் மன்றத்திற்கு தெரிவிக்கப்படாததால் பொது மக்களின் பங்களிப்புகள் குறித்த விபரங்கள் இம்மன்றம் அறிய இயலவில்லை. எனவே விபரங்கள் எதுவும் அறியப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படுகிறது. மேற்படி பொது மக்களின் பங்களிப்பு விபரங்கள் இம்மன்றத்திற்கு சமர்ப்பித்து மன்ற ஒப்புதல் பெற்ற பின்பு, மீள ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதிக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இந்நிலையில் பங்களிப்பு விபரங்கள் ஆணையாரால் விரிவாக தெரியப்படுத்திய காரணத்தினால் அதனை ஏற்று மதிப்பீடு விகிதம் A.S.P இன்போடெக் நிறுவன ஒப்பந்தப் புள்ளிக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 17:</u>**

நமக்கு நாமே திட்டம் 2021–2022ன் கீழ், கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 13.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றன. அதில் ஒரு நிறுவனத்தால் டெண்டர் முன் வைப்பு தொகை செலுத்தப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வல்லம் ரோடு சமீபம், குண்டாறு பாலம் மற்றும் பம்புஹவுஸ் சாலை சமீபம் ஆகிய இங்களில் Energy Efficient LED Mini Mast விளக்குகள் அமைத்தல் | 12.00 | 1) M/s Guhan Enterprises, Tirunelveli ஒப்பந்த மதிப்பை விட0.23% குறைவு |
| | | | 2) M/s Sri Ganga Electricals, Tirunelveli ஒப்பந்த மதிப்பை விட0.06%அதிகம் |

அலுவலக குறிப்பு

மதிப்பீட்டை விட 0.23% குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Guhan Enterprises, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்** :

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று நமக்கு நாமே திட்டம் 2001-2002-இன் கீழ் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பு தொகை மற்றும் பங்களிபபுத்தாரர் குறித்த பெயர் விபரங்கள் ஏதும் மன்றத்திற்கு தெரிவிக்கப்படாததால் பொது மக்களின் பங்களிப்புகள் குறித்த விபரங்கள் இம்மன்றம் அறிய இயலவில்லை. எனவே விபரங்கள் ஏதும் அறியப்படாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படுகிறது. மேற்படி பொது மக்களின் பங்களிப்பு விபரங்கள் இம்மன்றத்திற்கு சமர்ப்பித்து மன்ற ஒப்புதல் பெற்ற பின்பு, மீள ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதிக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். ஆணையாளர் அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு குகன் எண்டர்பிரைசஸ் ஒப்பந்தப் புள்ளிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 18:**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022 ன் கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 5 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் 4 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதி இல்லாததால் அங்கீகரிக்கப்படவில்லை. தொழில்நுட்ப தகுதி பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர்மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி முத்துசாமி பூங்கா மேம்பாட்டு பணி | 159.40 | திரு.இ.சரவணன்– ஒப்பந்த மதிப்பை விட4.90% அதிகம் |

ஒப்பந்த மதிப்பை விட 4.90% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய கோரப்பட்டதில் கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதால் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். எனவே திருஇ.சரவணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு விதி எண் : 2 பிரிவு–7 உட்பிரிவு – 2 ன்படி திரு. இ.சரவணன் என்பவரின்

**ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை செய்ய அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.**

தீர்மானம் :

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று வரப்பெறற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி இல்லாததால் நிராகரிக்கப்பட்டுள்ளது. நிர்வாக காரணங்கள் கொண்டும், ஆபிஸ் நிர்வாகம் தன்னிச்சையாக செயல்படுகிறது என்ற காரணத்திற்காகவும் தற்போதைய ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்து மறு ஒப்பந்தம் கோரி மன்றம் கேட்டுக் கொள்கிறது என்றனர். இந்நிலையில் திட்டத்தின் விபரங்கள், பணிகளின் முக்கியத்துவம் குறித்து ஆணையாளர் அவர்களின் விளக்கம் மன்றத்தில் எடுத்து கூறியது கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. திரு.இ.சரவணன் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 19:**

**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்:12087/2022/SBM, நாள்:11.05.2022ல் அனைத்து நகராட்சி ஆணையர்க்கும் CSR-I படிவத்தை கார்ப்பரேட் விவகார அமைச்சகத்திடம் தாக்கல் செய்து அனைத்து CSR நடவடிக்கைகளுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு தனித்துவமான அடையாளத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டதன்படி CSR-I படிவம் தயார் செய்து பதிவு செய்யப்பட்ட வகைக்கு ரூ.3500/- Associated Accountants தென்காசிக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.**

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**மன்றப் பொருள் 20:**

**O & M Gap Filling Interest Fund 2021-2022-ன் கீழ் இந்நகராட்சி சமுதாய கழிப்பறைகள் 2 எண்ணங்கள் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டிலும், பொது கழிப்பறைகள் 4 எண்ணங்கள் ரூ.1.30 லட்சம் மதிப்பீட்டிலும் மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண்:19089/2021/E2, நாள்:19.11.2021-ன்படி அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு அரசு மானியாக ரூ.8,55,600 மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.74440/- வருவாய் நிதியில் செலவிட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது நிதி**

ஒதுக்கீடு செய்யப்பட்ட அட்டவணையில் சுட்டி காட்டப்பட்டுள்ளது. ஆகவே ரூ.74440/– வருவாய் மூலதன நிதியிலிருந்து திட்ட மான்யத்திற்கு நிர்வாக பங்குத் தொகை அனுமதிக்க மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :**

பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று மேற்படி பணியினை இம்மன்றம் மூலம் குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த பின்னர் மன்ற ஒப்புதல் பெற்று நிர்வாக பங்குதொகை செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 21:</u>**

நகர்மன்ற துணை தலைவர் அவர்கள் முன்மொழியும் தீர்மானம் :

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட டோல்கேட் முக்கு கூட்டுறவு பால் பண்ணை எதிர்புறம் உள்ள டாஸ்மாக் கடையும், வல்லம் ரோடு அருகே உள்ள டாஸ்மாக் கடையும் பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், விவசாய நிலங்களுக்கும், கோவிலுக்கு செல்லும் பெண்களுக்கும், முக்கு திருப்பம் இருப்பதால் போக்குவரத்திற்கும், நடைவாதிகளுக்கும், குழந்தைகளுக்கும் (பள்ளிக்கூடம்) அருகில் இருப்பதாலும், அனைத்து வித மக்களுக்கும், திருமண மண்டபத்திற்கு செல்லும் மக்களுக்கும் இடையூறாக இருப்பதால் இந்த இரண்டு கடைகளையும் மாற்றி தர வேண்டி.

**தீர்மானம் :**

இந்த இரண்டு டாஸ்மாக் கடைகளும் பள்ளிக்கூடம், கோவில் அருகில் மற்றும் முக்கு திருப்பம் ஆகிய இடங்களில் இருப்பதால் பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதியும், பெண்கள் மற்றும் விவசாயிகள் நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே பொது மக்களின் நலன் மற்றும் போக்குவரத்து இடையூறு கருதி மக்களுக்கு இடையூராக உள்ள இரண்டு கடைகளையும் வேறு இடங்களுக்கு இடம் மாற்றம் செய்ய அரசுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 22:</u>**

16வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழியும் தீர்மானம் :

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட எனது வார்டில் KC ரோடு சாமியார் தெரு 1,2ம் சமாதானத் தெரு, பாண்டியர் வடக்கு தெரு, காட்டு நாயக்கர் தெரு, வடக்கு சந்தை தெரு, பாண்டியர் தெரு ஆகிய தெருக்களின் ரோடுகள் அனைத்தும் மிக பழமை வாய்ந்தது. அங்காங்கே ரோடுகளில் குண்டும், குழியுமாக இருப்பதால் மழை நீர் தேங்கி சுகாதார சீர்கேடு

விளைவிக்கும் நிலை உள்ளது. ஆகையால் அனைத்து ரோடுகளிலும் சிமிண்ட் தளக்கல் பதித்து தர வேண்டுவதுடன், சாமியார் தெருவில் ஓடைகள் கட்டவே இல்லை. அதனால் கழிவு நீர் அனைத்தும் ரோடுகளில் தேங்கி வருகிறது. மழைக்காலங்களில் நடந்து செல்ல இயலாத நிலை உள்ளதால் புதிதாகஓடை கட்டி தர வேண்டியும் கேசி ரேட்டில் குடிநீர் சின்டெக்ஸ் அமைத்து வேண்டி

புதிதாகரோடு போட வேண்டிய தெருக்கள் :

1) கேசி ரோடு சாமியார்தெரு 1,2ம்

2) சமாதான தெரு

3) பாண்டியர் வடக்கு தெரு

4) காட்டு நாயக்கர் தெரு

5) வடக்கு சந்தை தெரு

6) பாண்டியர் தெரு

7) அம்பேத்கார் தெரு

8) மாடசாமி தெரு

கேசி ரோட்டில் சின்டெக்ஸ் குடிநீர் தொட்டியும், சாமியார் தெருவில் ஓடை இல்லாததால் புதிய ஓடையும் கட்ட வேண்டி.

அலுவலகக் குறிப்பு :

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்800/2021/ஆ1 நாள் 01–11–2021ன் படி பொது நிதியில் மேற்கொள்ள இருக்கும் அனைத்துப் பணிகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதிக்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 23:</u>**

19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழியும் தீர்மானம்.

1) 19வது வார்டு சங்கரபாண்டியன் தெருவில் பேவர் பிளாக் ரோடு அமைக்க வேண்டி.
2) 19வது வார்டு சுப்பையாத் தெருவில் பாதி பேவர் பிளாக் ரோடுபோடப்பட்டது. மீதி பாதி பேவர் பிளாக் ரோடு அமைக்க வேண்டி.
3) 19வது வார்டு ராமசாமி தெருவில் இருக்கும் அடிபம்பு, டீச்சர் வேலாயுதம் பிள்ளை தெருவில் இருக்கும் அடிபம்பு ஆகியவற்றை சரி செய்ய வேண்டி.

4) **வல்லம்ரோட்டில் இருக்கும் டாஸ்மாக் கடை பொதுமக்கள் குடியிருப்பு பகுதிக்கு அருகில் இருப்பதாலும், பொது மக்கள் செல்ல இடையூறாக இருப்பதாலும் அதனை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டி.**
5) **கொல்லம் ரோட்டில் இருக்கும் டாஸ்மாக்கடை போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் அதனை மாற்றி தர வேண்டி.**
6) **வல்லம் ரோட்டில் இருக்கும் ரேசன் கடை அதிக ரேசன் கார்டு கொண்ட கடையாக இருப்பதால் எப்போதும் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. ஆதலால் அந்த கடையை இரண்டாக பிரித்து தர வேண்டி.**

அலுவலகக் குறிப்பு :

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்800/2021/ஆ1 நாள் 01-11-2021ன் படி பொது நிதியில் மேற்கொள்ள இருக்கும் அனைத்துப் பணிகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்** :

அனுமதிக்கப்படுகிறது.